NOOLAHAM
FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – டிசம்பர் 2018**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2018 டிசம்பர் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 977 | 42,042 |
| பக்கம் தவறியவை | 28 | 1,202 |
| வலைத்தளத்தில் அடங்காதவை | 3 | 70 |
| மொத்தம் | 1,008 | 43,314 |

## எண்ணிம நூலகம் (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 475 ஆவணங்கள் 20,718 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாண பொது நூலக பத்திரிகை ஆவணவாக்கலில் இம்மாதம் 412 ஆவணங்கள் 9,058 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் பல்கலைக்கழக ஆவணவாக்கலில் இம்மாதம் 121 ஆவணங்கள் 13,538 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 552 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 423 கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- 100 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கலின் முக்கியம் கருதி பக்கம் தவறியவை மற்றும் சிதைந்தவைகளும் தொடர்ந்தும் ஆவணமாக்கப்படுகின்றது.

## சேகர அபிவிருத்தி (Collections Development)

இம் மாதம் பரணிதரன், சசூலன், பத்மநாபஐயர் போன்றோருடைய ஆவணங்கள் மின்வருடப்பட்டுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

### ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)

டிசம்பர் மாதத்தில் கூழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
  - திருக்குடும்பக் கன்னியர் மடம் மிருசுவில்
- எழுத்தாளர்கள்
  - செல்லத்துரை நடராஜா
  - பாலகுமார் நாகலிங்கம்

### காப்புப்படி (Backup)

60700-62000 வரையான ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

### Master-files and Applications Backup

இம்மாதம் எடுக்கப்படவில்லை.

### ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் டிசம்பர் மாதம் கூழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| படங்கள் | 71 |
| மேற்கோள்கள் | 1 |
| ஒலிச்சேகரம் | 3 |
| எழுத்தாவணம் | 2 |
| தமிழ் நிகழ்த்துகைகள் | 1 |
| ஓவியங்கள் | 7 |

### பயனர் சேவை (User Service)

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 22,922 பயனர்களால் 262,963 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 72.2% புது வாசகர்களும் 27.8% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 1,709 பயனர்களால் 8,531 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 83.5% புது பயனாளர்களும் 16.5% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

**செயற்றிட்டங்கள் (Projects)**

**1. EAP**

இம்மாதத்திற்கான (மார்கழி மாதம்) EAP (1056) செயற்றிட்டத்திற்கு அமைவாக சுவடிகள் அளவுகள் குறைக்கப்பட்டு காப்புபடி எடுக்கப்பட்டது. அதன் விரிவான தரவுகள் metadata தாளில் பதியப்பட்டது.

**2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (மார்கழி மாதம்) தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக கிழக்கில் 04 களப்பணிகள் செய்யப்பட்டன.

**3. வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (மார்கழி மாதம்) வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக வடக்கிலும் கிழக்கிலும் தலா 01 வாய்மொழி வரலாறுப் பதிவுகளும் மலையகத்தில் 14 வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளும் இடம்பெற்றது.

4. பூர்வகுடிகள் ஆவணப்படுத்தல் கிழக்கில் இடம்பெற்றது.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் ஒரு கூட்டம் இடம்பெற்றது. அதற்க்கான இணைப்பு

- ஒக்டோபர் 14, 2018

https://docs.google.com/document/d/1spn8OXjPXg95zpTyBkCyUke7TN4YUe08aAlXplSd4WY/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- டிசம்பர் மாதத் தேவைகளுக்காக ரூ. 947,640.84 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 327,005.50, தொடர்பாடல் ரூ. 8,427.16, மின்சாரம் ரூ. 4,143.16, வாடகை ரூ. 30,000.00, உபகரணங்களிற்கான செலவு ரூ. 219,500.00 (அலுமாரி (6) ரூ. 96,000.00, ஏனையவை ரூ. 123,500.00), நிருவாகச் செலவு ரூ. 77,348.00, செயற்றிட்டச் செலவு ரூ. 241,002.00 ஏனைய செலவுகள் ரூ. 40,215.47 ஆகியன உள்ளடங்குகின்றன.
- டிசம்பர் மாதத்தில் அவுஸ்ரேலியா அன்பர்கள் ஊடாக ரூ. 126,350.00, கனடா அன்பர்கள் ஊடாக ரூ. 50,000.00, நோர்வே அன்பர்கள் ஊடாக ரூ. 191,121.00, இலண்டன் அன்பர்கள் ஊடாக ரூ. 273,600.00 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.